[5th August 1965

ரெவின்யூ டிவிஷன் அளவுக்குப் போயிருக்கிறது. இதில் நிலம் ஆர்சிதம் செய்வதில் நகரத்தைப் பொறுத்தளவில் நிலம் கிடைப்பது மிகவும் சிரமமாய் இருக்கிறது. கிராமத்தைப் பொறுத்த அளவில் வசதியான, போதுமான நிலங்கள் கிடைக்கின்றன. ஆகவே, நகரத்தை விட்டுவிட்டு, குறைந்தது நகரத்திலிருந்து 10 மைல்கள் தள்ளியிருக்கின்ற வகையில், கிராமங்களில் தொழிற்பேட்டையை அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : தொழிற்பேட்டை அமைப்பதற்கு நிலம் மட்டும் முக்கியமான விஷயம் அல்ல. நிலத்தை வைத்துக் கொண்டு இண்டஸ்ட்ரீஸ்ஸை ஏற்படுத்திவிட முடியாது. விவசாயத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் நிலம் கிடைத்தால் நல்ல வருமானம் கிடைக்கும். தொழிற்பேட்டைகளில் இயந்திரங்களில் இருந்துதான் வருமானம் கிடைக்கும். ஆகவே, நிலம் இருக்கிறது என்பதற்காக மட்டும் யாராவது தொழிலை ஆரம்பித்தால் நிச்சயம் கஷ்டப்படுவார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

* 87 *Q*.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to establish Industrial Estates at Tuticorin, Sivakasi, Vyasarpadi and Udumalpet; and

(*b*) if so, when will the same be implemented?

THE HON. SRI R. VENKATARAMAN. (*a*) Government do not propose to set up Industrial Estates in these places. However, interested entrepreneurs have formed themselves into Co-operative Societies and Industrial Estates are being established by them in these places. They are given financial assistance on the approved pattern by the Government.

(*b*) The schemes are under implementation.

* 88 *Q*.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the acquisition of lands for the establishment of the Industrial Estate in Salem has been completed; and

(*b*) if not, the reasons thereof?

THE HON. SRI R. VENKATARMAN : (*a*) No.

(*b*) A total extent of 26.56 acres of land in Narasojipatti and Reddiyur villages required for the establishmenat of an Industrial Colony at Salem was notified for acquisition under the Land Acquisition Act. But the owners of a major portion of the lands (19.72 acres) filed Writ Petitions in the High Court challenging the validity of the land acquisition proceedings and also obtained stay orders restraining the Land Acquisition Officer from passing the award. The Writ Petitions are still pending in the High Court.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் தொழிற்பேட்டை வைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இருந்தும், இதில் இன்னும்